1973 மார்ச் 24]

புலவர் சி. பழனிச்சாமி. தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகின்ற எழுத்தர்களை வே ஒன்றியங்களுக்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.— அவர்கள் இருப்பதன் காரணமாக ஊர் மக்களுக்கு அமைதிக்குக்கேடு ஏற்பட்டால் அல்லது அவர்கள் தவறுகள் செய்கிற நிலைமைகள் ஏற்பட்டால் அவர்களை அந்த ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மற்ற இடங்களுக்கு மாற்றுவதற்கு ஆன அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பெற்றிருக்கிறார்கள். சில பல இடங்களில் அப்படிப்பட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு ப. முத்துசாமி: இப்பொழுதே கூட இரண்டு மூன்று ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு ஊழியர் என்ற முறையிலே வேலை பாத்துக்கொண்டு சிக்கல் இல்லாமல் இருந்துக்கொண்டிருக்கிறது. குறைந்த பட்சம் எஸ். எஸ். எல். சி. படித்தவர்கள் அந்த வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடிய நிலைமையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய முறையிலே இரண்டு மூன் கிராமங்களுக்குச் சேர்த்து ஒரு நிரந்தர ஊழியர் நியமித்து அவருக்கு 150 ரூபாய் சம்பளம் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதையும் பரிசீலித்து பார்த்த பிறகுதான் சில சங்கடங்கள் வருகின்றன என்று விட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல் அவர் ஒரு ஊராட்சி மன்றத்திலே பகுதி நேர ஊழியராக இருக்கலாம், இன்னொரு ஊராட்சி மன்றத்திலேயும் பகுதி நேர ஊழியாக இருக்கலாம், இரண்டு மூன்று ஊராட்சிகளுக்கும் சேர்த்து நியமிக்கப்பட்டதாக இருக்காது, வேண்டுமானால் அவற்றையெல்லாம் பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

Nagapattinam Panchayat Union.

* 496 *Q.*—THIRU A. RAJAMANICKAM : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal to divide the Nagapattinam Panchayat Union into two unions having headquarters one at Nagapattinam and another at Tirupundi ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, பொதுவாக எவ்வளவு ஜனத்தொகையின் அடிப்படையிலே வளர்ச்சி வட்டாரங்கள் பிரிக்கப் படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் என்ற அளவிற்குக் கணக்கு வைத்திருக் கிறார்கள். சில இடங்களிலே ஒரு லட்சத்திற்கு மேற்கொண்டும் வருகிறது,

சில இடங்களிலே ஒரு லட்சத்திற்குக் குறைந்தும் வருகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் 375 என்றும் பிரிக்கப்பட்டது மத்திய அரசாங்கத்தினால் தான் பிரிக்கவேண்டிய நிலைமை வந்தது. காரணம் அவர்கள் உதவி செய்தது. நிர்வாக சீர்திருத்தக் குழுவிடம் இந்தப் பிரச்சனைப்பற்றி ஆராயச் சொல்லியிருக்கிறோம். அதை ஆராய்ந்து எந்த முறைகளில் ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்து அமைக்கப்பட வேண்டுமென்று அறிக்கை தருகிறார்களோ அப்படி அவர்கள் அறிக்கை தந்ததிற்குப் பிறகு அந்த அறிக்கையைப் பார்த்து தக்க முடிவுகள் எடுக்கலாம்.

மாநகராட்சி அரங்கம்

*497 வினா—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு கல்வி- உள்ளாட்சி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விலங்குக்காட்சிசாலைக்கு அருகில், அரங்கம் ஒன்றைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கோரி, சென்னை மாநகராட்சி, அரசுக்கு எழுதிக் கேட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம் (இ) 1970 ஆம் ஆண்டு சூன் திங்களில் மாநகராட்சி மன்றம், நாடகம் இசைமுதலிய பண்பாடு பற்றிய நிகழ்சிகளை நடத்துவதற்காக ஏறக்குறைய ரூபாய் பதினைந்து இலட்சம் செலவில் புதுமையானதொரு திரையரங்கம் கட்டுவதற்கான கருத்தை முன் மொழிந்தது. மாநகராட்சி மன்றம் அத்திட்டத்திற்கு நிதியளிக்கக் கூடிய நிலையில் இல்லாதிருக்கவே மன்றம் சிறப்பான நிதிநிலைமையினை யடையும்வரையில் அச்செயற்குறிப்பு தள்ளி வைக்கப்பட்டது.

பஞ்சாலைகளை நடத்த உதவித்தொகை

*498 வினா.—திரு. கே. ஏ. வகாப்.—மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) 1971 ஜூலை மாதத்தில், தமிழ்நாட்டில் மூடியுள்ள மில்களை எடுத்து நடத்த தேசீய கார்ப்பரேஷன் உதவியைக் கோரி தமிழ்நாடு அரசு, மத்திய அரசை நாடியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் மத்திய அரசின் பதில் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தேசீய பஞ்சாலை கார்ப்பரேஷன் அதன் கணக்கின்படி ஏழு மில் களுக்குக் கொடுக்கவேண்டிய உதவித் தொகையான ரூ.86·20 லட்சத்தைத் தற்சமயம் கொடுத்துவிட்டது. எடுத்த மில்களை யந்திர நவீனமாக்குதலுக்கு தேசீய கார்ப்பரேஷன் இதுவரை ரூ. 4·76 லட்சம் தான் கொடுத்துள்ளது.